Helsedirektoratet   Statens legemiddelverk   DSA Direktoratet for strålevern og atomsikkerhet



Kaliumjodid SERB 65 mg
உட்கரு விபத்துகளின் நிகழ்விற்கான அயோடின் மாத்திரைகள்

நீங்கள் 40 வயதிற்குட்பட்டவரா, கர்ப்பிணியா, பாலூட்டும் தாய்மாரா அல்லது வீட்டில் குழந்தைகள் இருக்கின்றார்களா? ஆம் என்றால் அயோடின் மாத்திரைகளை நீங்கள் வீட்டில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று நாங்கள் உங்களுக்கு பரிந்துரைக்கிறோம். உட்கரு விபத்துகளின் நிகழ்வின் போது ஏற்படும் கதிரியக்க அயோடினுக்கு எதிரான பாதுகாப்பினை இந்த மாத்திரைகள் தருகிறது மேலும் இதை மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் மட்டுமே உட்கொள்ள வேண்டும்.

அயோடின் மாத்திரைகளை ஏன் உட்கொள்ள வேண்டும்?

உட்கரு விபத்துகளின் நிகழ்வின் போது, கதிரியக்க அயோடினானது காற்றின் மூலமாக பரவும் மேலும் மாசடைந்த காற்றை சுவாசிப்பதால் மற்றும்/அல்லது மாசடைந்த உணவு அல்லது குளிர்பானங்களை சாப்பிடுவதாலும் இந்த கதிரியக்க அயோடினானது தைராய்டு சுரப்பியால் உறிஞ்சப்படுகிறது. அயோடின் மாத்திரைகள் தையராய்டு நாளம் கதிரியக்க அயோடினை உறுஞ்சுவதை தடுக்கிறதுது. மேலும் புற்றுநோய் ஏற்படுவதற்கான ஆபத்தினையும் குறைக்கின்றது. அயோடின் மாத்திரைகள் கதிரியக்க அயோடினிலிருந்து மட்டுமே பாதுகாக்கும் மற்றும் பிற கதிரியக்க பொருள்களில் இருந்து பாதுகாக்காது.

மாத்திரைகளை எடுத்துக் கொள்வதற்கான வழிமுறைகளுக்கு இந்த வழிமுறைகளுக்கு ஏற்றவாறு நீங்கள் 2 நாட்களுக்கு வீட்டிலேயே இருக்க வேண்டி வரும். அதனால்தான் வீட்டில் எப்போதும் அயோடின் மாத்திரைகளை சேமித்து வைப்பது மிகவும் முக்கியமாகும்.

இந்த மாத்திரைகளை ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும்?

இந்த மாத்திரைகளை தகுதியுடைய மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் **மட்டுமே** எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு உட்கரு விபத்தின் நிகழ்வின் போது, ஊடகம் மூலம் இதற்குரிய அதிகாரிகள் மற்றும் www.dsa.no மூலமாக ஆலோசனை வழங்கப்படும்.

இந்த மாத்திரைகளை யாரெல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டும்?

18 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் மற்றும் இளம் வயதினரும், கர்ப்பிணி பெண்கள் மற்றும் தாய்ப்பால் கொடுப்பவர்களும் இந்த மாத்திரைகளை எடுத்துக்கொள்வது மிகவும் முக்கியம், ஏனென்றால் கதிரியக்க அயோடைனின் வெளிப்பாட்டின் காரணமாக தைராய்டு புற்றுநோயானது அதிகமாக ஏற்படுவதற்கான ஆபத்து உள்ளது. சிறப்பு சூழ்நிலைகளிலும் கூட இதற்கு தொடர்பான 18 முதல் 40 வயதிற்குள் இருக்கும் இளம் வயதினரும் இந்த மாத்திரைகளை எடுத்துக் கொள்ள வேணும். 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தைராய்டு புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு மேலும் இந்த மாத்திரைகளை இவர்கள் எடுத்துக்கொள்ள தேவையும் இல்லை. அறுவை சிகிச்சை மூலமாக தைராய்டு சுரப்பியினை அகற்றியவர்கள் இந்த அயோடின் மாத்திரைகளை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

உட்கரு விபத்தின் போது, எந்தக் குழு மக்கள் இந்த மாத்திரைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான கூடுதல் வழிமுறைகள் இதற்கென்று இருக்கும் அதிகாரிகள் வழங்குவார்கள்.

கலியம்ஜோடிட் SERB (65 மி.கி.) எவ்வளவு நான் எடுத்துக் கொள்ளவேண்டுமா?

12 வயதுக்கு மேற்பட்டவர்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்: 2 மாத்திரைகள்(= 130 மி.கி.)

மாத்திரையை நிறைய நீர் அல்லது பிற பானத்துடன் முழுங்க வேண்டும், தேவைப்பட்டால், மாத்திரைகளை மென்று, உடைத்து அல்லது நசுக்கி உட்கொள்ளலாம் மேலும் பழச்சாறு, ஜாம், பாலுடன்
அல்லது அதைப் போன்றவற்றுடன் சாப்பிடலாம்

சிறுவர்கள் 3-12 வயதினர்: 1 மாத்திரை(=65 மிகி)

நிறைய நீர் அல்லது பிற பானத்துடன் முழுங்கலாம் தேவைப்பட்டால், மாத்திரைகளை மென்று அல்லது உடைத்து கரண்டியால் யோகர்ட், ஜாம் அல்லது அதைப் போன்ற திட திரவ பொருட்கள் அல்லது தண்ணீர் கலந்து சாப்பிடலாம்.

மாத்திரைகளை மென்று, உடைக்து அல்லது நசுக்கி எடுத்துக்கொள்ளலாம் மேலும் பழச்சாறு, ஜாம், பாலுடன் சுமார் 2 நிமிடங்கள் வரைக் கிளறவும்- கரைசலில் மாத்திரை முற்றிலும் கரையாது, இருப்பினும் நன்றாக இருக்கும். குழந்தைக்கு கலவையைப் பருக கொடுத்து பின் குடிக்க நிறைய பானம் கொடுக்கவும்.

1 மாதம் முதல் 3 வயது வரையிலான குழந்தைகளுக்கு: 1/2 மாத்திரை (= 32.5 மிகி)

மாத்திரையைப் பாதியாக உடைக்கவும். ஒரு பாதி மாத்திரையை குழந்தைக்கு கொடுங்கள். இதனை மென்று அல்லது உடைத்து ஸ்பூனில் யோகர்ட், ஜாம் அல்லது அதனை போன்ற திட திரவ பொருடகளுடன் அல்லது தண்ணீர் கலந்து சாப்பிடலாம்
தண்ணீருடன் கலக்கும் போது: மாத்திரையின் ஒரு பாதியை டம்ளரில் வைக்கவும், சிறிது தண்ணீர் சேர்த்து சுமார் 2 நிமிடங்கள் கிளறவும். மாத்திரை முழுவதுமாக கரையாது இருப்பினும் பரவாயில்லை. குழந்தைக்கு மருந்து டோஸைக் கொடுத்தபிறகு குடிக்க நிறைய பானம் கொடுக்கவும்.

1 மாதத்திற்கும் குறைவான வயதுடைய குழந்தைகளுக்கு: 1/4 மாத்திரை (= 16.25 மி.கி.)

மாத்திரையை நான்கு பாகமாக உடைக்கவும். ஒரு டம்ப்ளரில் கால் பகுதியை வைத்து, தண்ணீர் சிறிது சேர்க்கவும் (சுமார் 2- 2.5 மிலி ல்லது ஒரு தேக்கரண்டி தண்ணீர் போதுமானது) சுமார் 2 நிமிடங்கள் கிளறவும் - மாத்திரை முழுவதுமாக கரையாது, இருப்பினும் பரவாயில்லை. ஒரு சிரஞ்ஜ அல்லது ஸ்பூனைக் கொண்டு குழந்தைக்கு புகட்டவும். பிறகு குடிக்க நிறைய தண்ணீர் கொடுக்கவும்

தாய்ப்பால் பருகும் குழந்தையாக இருந்தாலும் அதே அளவைக் கொடுக்கவும்.

தேவைப்படுபவை: மருந்தகங்களிலிருந்து டோசிங் சிரிஞ்ஜுகளை வாங்கலாம் அல்லது மாற்றாக தேக்கரண்டியைப் பயன்படுத்தலாம்.

பொதுவாக, குழந்தைகள் அயோடின் உட்கொண்ட பிறகு மருத்துவரால் பரிசோதிக்கப்படுவதற்கு அவசியமில்லை, ஆனால் குழந்தையின் உடல்நிலை குறித்து ஏதேனும் சந்தேகம் இருந்தால் உங்கள் மருத்துவரை அணுகலாம். ஏனென்றால், அயோடின் டோஸ் கொடுக்கப்பட்ட இளம் குழந்தைகளுக்கு(0-1 மாதம்) மெட்டபாலிசம் குறைவதற்கான (வளர்சிதை மாற்றத்தின்) அபாயம் அதிகம் உள்ளது. முன்கூட்டியே பிறந்த குழந்தைகளுக்கு, கர்ப்பத்தின் 37 வது வாரத்தை கடக்கும் வரை அயோடின் மாத்திரைகள் பொதுவாக பரிந்துரைக்கப்படுவதில்லை.

இதுபோன்ற நிலைகளில் அயோடின் மாத்திரைகளை உட்கொள்ள வேண்டாம்:

- உங்களுக்கு பொட்டாசியம் அயோடைடு அல்லது மருந்தில் உள்ள வேறு பொருட்களுக்கு(நோயாளி தகவல் சீட்டில் பட்டியலிடப்பட்டுள்ளது) ஏதேனும் ஒவ்வாமையாக இருந்தால்

அயடின் மாத்திரைகளை எடுத்துக் கொள்ளுங்கள், ஆனால் உங்கள் மருத்துவரை அணுகுங்கள்:

- உங்களுக்கு மெட்டபாலிக் (வளர்சிதை மாற்றக் கோளாறு) மாற்றம் இருந்தால், உட்கொண்ட 6-12 வாரங்களுக்குப் பிறகு உங்கள் மெட்டபாலிக் (வளர்சிதை மாற்றம்) சோதனைகளைச் செய்யவும்.
- நீங்கள் கர்ப்பமாக இருந்தால் மற்றும் மெட்டபாலிக் (வளர்சிதை மாற்றம்) கோளாறு இருந்தால், அயோடின் எடுத்துக் கொண்ட 2 வாரங்களுக்குப் பிறகு கர்ப்ப காலத்தில் உங்கள் மெட்டபாலிக்கைக் (வளர்சிதை மாற்றத்தைக்) கண்காணிக்க வேண்டும்.
- உங்களுக்கு டெர்மடிடிஸ் ஹெர்பெட்டிஃபார்மிஸ் (டஹ்ரிங்ஸ் நோய்) இருந்தால், அயோடின் உட்கொள்வதன் காரணமாக உங்கள் சருமம் மோசமாகலாம் மற்றும் உங்கள் மருத்துவர் உங்கள் சிகிச்சையை மாற்றியமைக்க வேண்டியிருக்கலாம்.

அயடின் மாத்திரைகள் பற்றி ஏதேனும் கேள்விகள் உள்ளதா? www.dsa.no. என்பதைப் பார்க்கவும். இங்கு வேறு பல மொழிகளிலும் தகவல்களைக் காணலாம்.